**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**S.C.42/2019 –** P.W.14

Deposition of witness for Prosecution:

Name : திருமதி. வனிதா — Husband Name. ரகுபதி
Father Name. K. நாராயணசாமி

Village : மயிலாடுதுறை

Date : 05.02.2025

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 05.02.2025.

**( எதிரி ஆஜர் )**

**சாட்சி மனுவின்பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**.

கடந்த 11.09.2010ம் தேதி தகவல் அடிப்படையில் நான் திருவாரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சென்றபோது அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்ததாக சொல்லப்படும் பன்னீர்செல்வம் என்பவர் இவர்தான் என்று எனக்கு யார் அடையாளம் காட்டியது என்றால் வார்டு நர்ஸ் அடையாளம் காட்டினார். அவ்வாறு அடையாம் காட்டிய நர்ஸ் பற்றிய விபரத்தினை நான் பதிவு செய்த புகார் வாக்குமூலத்திலோ, முதல் தகவல் அறிக்கையிலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. புகார் வாக்குமூலம் பெறுவதற்காக நான் எங்கள் காவல் நிலையத்தில் இருந்து எந்த வாகனத்தில் சென்றேன் என்றால் பஸ்சோ, வண்டியோ என்று ஞாபகம் இல்லை. நான் தகவல் அடிப்படையில் மருத்துவமனைக்கு சென்றபோது மேற்படி பன்னீர்செல்வம் சிகிச்சைக்கு சேர்ந்தது குறித்து திருவாரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டு ஆவணத்தை பெற்று, புகார் வாக்கமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கையுடன் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேனா என்றால் அனுப்பிவைத்தேன். நான் சொல்லக்கூடிய விபரம் தவறு என்றும், அவ்வாறு ஒரு விபத்து பதிவேட்டு ஆவணமே அனுப்பிவைக்கவில்லை என்று சொன்னால் சரிதான். அந்த விபத்து பதிவேட்டு ஆவணத்தின் சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்ட விபரமும், மேற்படி பன்னீர்செல்வத்தின் மன நிலையும், நான்

பதிவு செய்ததாக சொல்லப்படும் புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கைக்கு எதிராக இருந்ததால் அதனை சேர்த்து அனுப்பாமல் விட்டுவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான் பன்னீர்செல்வத்தை மேற்படி மருத்துவமனையில் பார்த்தபோது அவர் சுயநினைவோடு இல்லை என்பதால் அவரது மனைவியை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தேன் என்பதை காட்ட, மருத்துவ ஆவணங்கள் ஏதேனும் பெற்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பன்னீர்செல்வம் நல்ல நிலையில்தான் சுயநினைவோடு இருந்தார் என்றும் அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தால் வழக்கின் உண்மை நிலை தெரிந்துவிடும் என்பதற்காக அவரை விசாரணை செய்யாமல் அவரது மனைவியிடம் புகார் வாக்குமூலம் பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

மருத்துவர் வழங்கியதாக சொல்லப்படம் அதசாஆ.13றான பன்னீர்செல்வத்திற்கான Discharge summary ல் மேற்படி பன்னீர்செல்வம் நாகப்பட்டினம் அரசு தலைமை மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்த போது சுயநினைவோடும், நல்ல மன நிலையிலும் இருந்ததாகத்தான் சொல்லப்பட்டுள்ளது என்றும், நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல அவரை நான் சொல்லும் மருத்துவமனையில் பார்க்காமலேயே புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல்அறிக்கை தயார் செய்ததால்தான் அவர் சுயநினைவின்றி கிடந்தார் என்று தவறாக சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**